**01.04.2021**

**அ.வ.எண்.249/2012**

**குறுக்கு விசாரணை** வா.சா.2

நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் 4 எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு யாருடைய பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் ஆதிமூலம் பெயரில் கொடுக்கபட்டுள்ளது. ஆதிமூலம் என்பவர் இவ்வழக்கின் 1ம் வாதி பன்னீர்செல்வம் என்பவரது தந்தை ஆவார். எந்த வருடம் பட்டா ஆதிமூலம் பெயரில் கொடுக்கபட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பட்டா எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு விஸ்தீரணம் நிலத்திற்கு கொடுக்கபட்டது என்றால் அதை பற்றி தெரியாது. பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாரியை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து மாரி என்பவருக்கு சொந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நிருபிக்கும் வகையில் நான் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

மாரி என்பவருக்கு எத்தனை நபர்கள் வாரிசுகள் என்றால் ஆதிமூலம் மட்டும் தான். தாவா சொத்து ஆதிமூலத்தின் அனுபவத்தில் இருந்தது என்பதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறி உள்ளபடி தாவா சர்வே எண்ணில் அரசாங்கம் 2 செண்டு நிலத்தை எடுத்துள்ளதாக குறிப்பிடப்படும் சங்கதிகள் எந்த ஆண்டு எந்த திட்டத்தின் கீழ் அரசாங்கம் அவ்வாறு செய்துள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. தாவா சர்வே எண்ணில் தான் பிரதிவாதிகள் பெயரில் தனிதனியாக பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. அது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் ராமதாஸ் வீடு கட்டி இருந்தாரா என்றால் பூர்வீகமாக கட்டி இருந்தார். தற்போதும் அவர் தாவா சொத்தில் வீடு கட்டி வசிக்கின்றார். தாவா சொத்தில் வேறு யாருக்கு வீடு உள்ளது என்றால் கிருஷ்ணன் 2ம் பிரதிவாதிக்கு வீடு உள்ளது. சத்தியா, குப்பன், பச்சையப்பன், சரோஜா ஆகியோர்களுக்கும் அங்கு வீடு இருந்ததா என்றால் அவர்கள் மூதாதையருக்கு ஏற்கனவே அங்கு வீடு இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் கூறி தயாரிக்கபட்டது என்றால் நான் கூறவில்லை. எனது மாமா குமார் இவ்வழக்கின் 2ம் வாதி கூறி தயாரிக்கபட்டதாகும். ஆகையால் எனது பிரமாண வாக்குமூலத்தில்

உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் தவறுதலாக பட்டா கொடுக்கபட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலே எனது சாட்சியத்தில் பட்டா யாருடைய பெயரில் வழங்கபட்டுள்ளது என்ற விவரம் பற்றி தெரியாது என்று கூறி உள்ளபடியால் பிரமாண வாக்குமூலத்தில் கூறியபடி யாருடைய பெயரில் தவறாக பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் தவறாக பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு தாவா சொத்து சர்வே எண் பல உட்பிரிவுகளாக செய்யபட்டு குப்பன், பஞ்சப்பன், கிருஷ்ணன், முனுசாமி, அமிர்தம்மாள் ஆகியோர் பெயரில் தனி தனியாக பட்டா வழங்கபட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. 2ம் வாதி என் தாயாரின் தம்பி ஆவார். வழக்கு விவரங்கள் பற்றி எதுவும் தெரியாமல் வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றபடியால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.